MENMATHI KOVAI TAMIL MANDRAM   INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :6 /Issue 6 / January 2026    E-ISSN 3049-3676 (Online)

மேன்மதி கோவை தமிழ் மன்றம்

சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

MENMATHI KOVAI TAMIL MANDRAM

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS

# சங்க இலக்கியங்களில் திருமணச் சடங்குகள்

**ஆய்வாளர்**

மு. ஹெலன் ஜாய்ஸ் ,

முதுகலை தமிழ் இலக்கியம்

இரண்டாம் ஆண்டு, தமிழ்த்துறை ,

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ,

ஒட்டன்சத்திரம் .

**நெறியாளர்**

கி. ஜோதிமணி டிடிஇடி.,எம்.எ.,பி.எட்.,எம்.பில்.,( பி. எச். டி).,

உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை ,

சக்தி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ,
ஒட்டன்சத்திரம் .

JANUARY - FEBRUARY

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

# MARRIAGE CUSTOMS

**Researcher**

**M.Helan Joyce,**

M.A.Tamil Literature,

Second Year, Department of Tamil,

Sakthi College of Arts and Science for Women,

Oddanchatram.

**Guide**

**K.Jothimani,** DTED.M.A. B.Ed., M.Phil. (Ph.D).

Assistant Professor, Department of Tamil,

Sakthi College of Arts and Science for Women,

Oddanchatram.

**ABSTRACT**

Marriage is a very social, cultural and spiritual event in human society. It is an institution that unites not only individuals but also families and communities. Wedding rituals are seen as a symbol of its tradition, beliefs, culture and religious foundation in every society. This study examines the origin, development, and social utility of marriage rituals. In ancient times, marriage evolved to ensure procreation and the preservation of the family unit. Over time, Religious Rituals, Social Traditions and Legal Norms Combined to Transform Marriage into a Sacred Relationship. Marriage rituals in still discipline, responsibility and family bonds in the bride and groom. They also serve as an important tool to ensure social cohesion, kinship and cultural continuity.in modern times, educational, economic, and social changes have led to simplification and changes in marriage rituals.

## முன்னுரை

மனிதகுல வரலாற்றில் ஆணும் பெண்ணும் இணைந்து வாழும்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

வாழ்க்கையில் மணம் என்பதற்கும் அதையொட்டிய சடங்குகளுக்கும் தனித்துவமான இடமுண்டு. காட்டுமிராண்டி நிலையில் இணைவிழைச்சுக் காரணம் பற்றி ஆண் பெண் இணைதல் என்பது சமூக வளர்ச்சிப்போக்கில் திருமணம் ,குடும்பம் ,குழந்தைகள் ,மரபினர் என்று அமைகின்றது.அவ்விணையில் காலப்போக்கில் சில சடங்குகள் உருவாக்கம் பெறுகின்றன . அச்சடங்குகளும் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபட்டுள்ளன. இக்காலத்தில் தமிழரின் நாகரிகம் முழு மலர்ச்சியுற்றிருந்தது. சங்கத் தமிழர் தங்கள் வாழ்வில் களவொழுக்கம், கற்பொழுக்கம் ஆகிய இருவகை ஒழுக்கங்களையும் கொண்டிருந்தனர் . சங்ககாலத்தில் திருமணம் என்ற கற்பொழுக்கம் மிகுதியாகவும் காதல் என்ற களவொழுக்கம் குறைவாகவும் அக்காலச் சமுதாயத்தில் இருந்தது . சங்க இலக்கியத்தில் காதலும் , திருமணமும் உணர்வுகளை வென்றெடுக்கம் கருப்பொருள்கள் ஆகிவிட்டன . சங்காலத்தில் காதல் திருமணமே அதிகம் இருந்தது காதலும் ,வீரமும் அவர்களின் பண்பாடாகும்.சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை,பத்துப்பாட்டு,பதினெண்க்கீழக்கணக்கு நூல்கள் ,ஆகியன தமிழரின் ஒப்பற்ற நாகரிகச் சிறப்புக்குச் சான்றாகும். பண்டைய திருமண முறையில் சேவை புரிந்து மணத்தல் ,பொருள் கொடுத்து மணத்தல் , போர் நிகழ்த்தி மணத்தல் ,திறமையை வெளிக்காட்டும் வகையில் வீரத்தின் காரணமாக மணத்தல் , தன் காதல் முகுதியினை காட்டி மணத்தல் ஆகிய மணமுறைகள் களவு நெறி , கற்பு நெறி ,ஆகிய இருவகை மண முறைகளிலும் இருந்துள்ளன. உறவு முறைத்திருமணம் ,கலப்புமணம் ஆகிய வகைகளில் கூட களவு மணமும் இருந்தது என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம் .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**மணமுறை**

மணமுறை ஒழுங்கற்றுப் பல்வேறு குலப்பிரிவுகள் தொழிலடிப்படையில் தோன்றிய பிறகு சில சடங்கு முறைகளை மேற்கொண்டனர் . இதன் அடிப்படையில் ஐவகை நிலங்களிலும் வேறுபட்ட மணமுறை காணபட்டன . திருமணம் போன்ற விழாக்கள் நிகழும் பொழுது வீட்டில் செம்மண் பூசுவதும் முற்றத்தில் இளமணலைப் பரப்புவதும் ,பெண் எருமையின் கொம்பை வீட்டில் வைத்து தெய்வமாக வழிபடுவதும் மரபாகக் கொண்டிருந்தனர் . சங்ககாலத் திருமண முறைகள் இன்றைய நிலையிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றது . பண்டையகால திருமணங்கள் அகமணம் , புறமணம் என்ற இரு நிலைகளில் அமைந்துள்ளது . திருமண பந்தலில் நல்ல புதுமணல் பரப்பி இருந்தார்கள் . மணமனையில் எங்கும் நல்விளக்குகளை ஏற்றியிருந்தார்கள். மாலைகளைத் தொங்கவிட்டிருந்தார்கள் . புதுமணப்பெண் புகுந்த வீடு சென்ற பிறகு நல்ல சுவை மிகுந்த உணவுகளை ஆக்கிக் கணவனுக்குத் தருகிறார் . முதன் முதல் மணப்பெண் பாலை உலையாக வைத்துச் சோறு சமைத்தல் முறை , அவள் சமைத்துப் படைக்கும் பால் உணவைத் தலைவன் உண்டான் . இது ஒரு சடங்காக இருந்துள்ளது .

**“ துவரப் புலர்ந்து தூமலர் கஞலிக்**
**தகரம் நாறும் நன்றறுங் கதுப்பின்**
**புதுமண மகடூஉ அயனிய கடிநகர்ப்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**பல்கோட்டு அடுப்பில் பால்உலை இரீ,**

**கூழை கூற்தற் குறுங்கொடி மகளிர்**
**பெருஞ்செயல் நெல்லின் வாங்கு கதிர் முறித்துப்**
**பாசவல் இடிக்கும் இருங்கால உலக்கை "**

**( அகம் :141 )**

என்னும் அகநானூறு பாடல் வழி நம்மால் அறிய முடிகிறது.

**குடும்பமுறை**

பக்தவத்சலபாரதியின் கள ஆய்வின் விளக்கத்திலிருந்து , திருமணமுறை எவ்வாறு களவுமுறையிலிருந்து கற்பு முறைக்கு மாறியுள்ளது என்பதை உணர்ந்துகொள்ள முடிகின்றது . சங்க காலத்திலேயே தமிழ் சமூகத்தில் திணை , சூழல், பொருளாதாரம் , சமூகம் , பயன்பாடு ஆகிய கூறுகளுக்கிடையில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றம் பண்பாடுகளின் கலப்பு ஆகியவற்றில் பல மாற்றங்கள் ஏற்பட்டன . இதனால் பொய்யும் வலுவும் மலிந்தன . களவு வாழ்விலிருந்து கற்புநெறியுடைய குடும்பமுறை கட்டமைக்கப்பட வேண்டிய நிலைக்கு மாறினர் **.**

**திருமணச் சடங்கு முறைகள்**

சங்க காலத்தில் தலைவனும் தலைவியும் களவொழுக்கத்தில் ஈடுபட்டு திருமணம் புரிந்து கொள்வதும் , பெற்றோர்கள் இசைவு பெற்றுத் திருமணம் செய்து கொள்வதும் வழக்கத்தில் இருந்துள்ளது . பெண்ணின் பெற்றோர் தன் மகளைத் தலைவனுக்குத் கொடுக்க

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்

Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

அதை ஏற்றுக் கொள்வதே கற்பு வாழ்வின் தொடக்கமாக இருந்துள்ளது . அக்காலத்தில் திருமண சடங்கு முறைகளை அழகாக வர்ணிக்கின்றனர் சங்கப் புலவர்கள் .

அதனை நல்லாவூர் கிழார் ,

**" உழுந்து தலைப்பெய்த கொழுங் களி மிதவை**
**பெருஞ் சோற்று அமலை நிற்ப , நிரை கால்**
**தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞமிரி**
**மனை விளக்குறுத்து , மாலை தொடரி**
**..................................................**
**வாழ் இழை மகளிர் நால்வர் கூடி "**

**( அகம் :86 )**

என்ற அகநானூறு பாடல் வழியாக திருமண சடங்கு முறைகளை நமக்கு வர்ணித்துக்காட்டியுள்ளார் .

**பெண்கேட்டுவருதல்**

தான் விரும்பியபெண்ணைமணம் செய்ய பெண் கேட்டுச் செல்லுதல் வழக்கத்தில் உள்ள செயலாகும். அவ்வாறு செல்லும் போது வீட்டில் உள்ள பெரியவர்களை அழைத்துச் செல்வர். அதுபோல் சங்ககால திருமணங்களிலும் இவ்வழக்கம் இருந்திருக்கிறது. அடக்கமும், நாணமும் உடைய தலைவியைப் பெண்கேட்டுத் தலைவன் தலைவியின் தந்தையை அணுகுகிறான்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இந்நிகழ்வில் இருந்துத்திருமண நடைமுறைகள் ஆரம்பமாகின்றன . இதனை குறிஞ்சிக்கலி பின்வருமாறு ,

**"நெறி அறி செறி புரிதிரிபு அறியா அறிவனை முந்துறீ ,**
**தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக**
**வேய்புரை மென்தோள் பசலையும் அம்பலும்**
**மாயப் புணர்ச்சியும் எல்லாம் உடன் நீங்க**
**சேய் உயிர் பொற்பனும் வந்தனன்**
**பூ எழில் உண்கணும் பொலிகமா இனியே "**

**( கலி : 39 )**

இதன் மூலம் பெண் கேட்டு வரும் நிலை காட்டபடுகிறது .

தலைவன் வீட்டார் தன் இனத்தோடு கூடி பெண் கேட்டு தலைமகள் வீட்டிற்கு வருதல் முறையும் , இங்ஙனம் நிகழ்கின்றன . இதை ,

**" தகைமிகு தொகைவகை அறியும் சான்றவர் இனமாக**
**சேய் உயர் வெற்பனும் வந்தனன் "**

**( கலி : 93 )**

திருமண உறுதிபாட்டிற்கு நாள் குறிக்கச் சுற்றத்தோடு வந்ததை இப்பாடலடிகள் குறிப்பிடுகின்றன .

**மண அறிவிப்புச் செய்தல்**

தலைவனுக்கும் தலைவிக்கும் இடையே நிகழவிருக்கிற மணத்தைக் குறித்துச் செய்தி அறிவிக்கும் வழக்கமும் உண்டு .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

இது இன்றைய திருமண உறுதி விழாவினைப் போலக் கருதபடக்கூடியதாகும் . மணமகளின் பெற்றோர் மதுவுண்டு , வீட்டைப் புதுக்கி , மணலைக் குவித்து இந்த அறிவிப்பை செய்தனர் என்று அகநானூறு குறிப்பிடுகின்றது .

**“ நனைவினை நறவின் தேறல் மாந்தி ,**
**புனைவினை நல்லில் தருமணல் குவைஇ ,**
**பொம்மல் ஓதியெம்மகள் மணனென ,**
**வதுவை அயந்தனர் நமரே “**

**( அகம் : 221 )**

இக்ககூற்றின் வழியாக நாள் குறித்த பிறகு திருமணம் நடைபெறுகிறது என்கிற செய்தியை களத்தரவுகள் வழியாக பெற முடிந்தது .

**மலரணிதல்**

திருமணம் செய்ய இருவீட்டார் முடிவு செய்தபின் பெண்ணுக்கு மலரணியும் நிகழ்வினை மாப்பிளை வீட்டார் செய்வது வழக்கத்தில் உள்ளது . ‘ **பூ வைத்தல்** ’ என்று இதனை அழைக்கின்றனர் . இதனாலே தான் சான்றோர்கள் ‘ **கூந்தற் கிழவன்** ’ என்று காதலனைக் குறித்தனர்.

இதனை விளக்கும் வகையில் ஐங்குறுநூறில் ,

**“இனிது செய்தனையால் நுந்தை வாழியர் !**
**நல் மனை வதுவை அயர இவள்**
**பின் இருங் கூந்தல் மலர் அணிந்தோயே “**

**( ஐங்குறு : 294 )**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

என்னும் பாடல் வரிகள் தலைவனுக்கு தோழி கூறும் கூற்றாக அமைகின்றன .**'களவு வாழ்க்கையில் பிறர் அறியா வண்ணம் இவள் கூந்தலில் மலரணிந்து மகிழந்தவனே! இன்று அனைவரும் கண்டு மகிழும்படி இவ்வதுவைச் சடங்கிலும் மலரணிவித்து இனிய செயலினைச் செய்து எம்மை மகிழவித்தாய் '** என்று தோழி தலைவனிடம் கூறி மகிழ்ச்சி அடைந்தாள் என இப்பாடல் வழி அறிகிறோம் .

**நிமித்தம் பார்த்தல்**

திருமண விழாவில் புள் நிமித்தம் பார்த்தல் முக்கியமான ஒரு சடங்கு முறையாகும் . தமிழர்கள் புள் நிமித்தம் பார்த்து திங்களை உரோகிணி கூடிய நன்னாளில் மணமனையினை அழகுப்படுத்திக் கடவுளை வழிபட்டு திருமணம் நடத்திய செய்தியானது அகநானூற்றுப்பாடலில் காணமுடிகின்றது .

சான்றாக ,

**" புள்ளு புணர்ந்து இனிய ஆக , தெள ஒளி**
**அம்கண் இருவிசும்பு விளங்க , திங்கட்**
**சகடம் மண்டிய துகள்நீர் கூட்டத்து**
**கடிநகர் புனைந்து "**

**( அகம் : 136 )**

இப்பாடல்கள் வாயிலாகத் தமிழர்கள் நிமித்தம் பார்ப்பதிலும் தவறவில்லை என்பது புலனாகிறது .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**திருமணம் செய்யும் காலம்**

பண்டைத் தமிழர் இல்லறமாம் நல்லறத்தை இனிது நடந்த ஏற்ற காலத்தைப் பார்க்கும் வழக்கம் உடையவராக இருந்தனர் . திருமணம் செய்ய ஏற்ற காலமாக வேங்கைபூக்கும் காலத்தைக் கொண்டிருந்தனர் . இச்செய்தியை ,

**" .... நல்மலைநாடன்**
**வேங்கைவிரிவு இடம் நோக்கி**
**வீங்கு இறைப் பணைத்தோள் வரைந்தாள் கொளற்கே "**

**( கலி : 38 )**

என்ற கலித்தொகை பாடல்வரிகள் நமக்கு விளக்குகின்றன .

**காப்புகட்டுதல்**

திருமணநாளில் மணமகளுக்குக் கையில் காப்புக் கட்டும் வழக்கத்தை அன்று முதல் இன்று வரை பின்பற்றி வருகின்றனர் . மக்கள் , ஆடை , ஆபரணங்களைக் கொண்டு மணமகளை அழகுபடுத்தும் போது நறுமணங்கமழும் மொட்டுடன் விரவிக்கட்டிய வெண்மையான காப்பு நூலை மணமகளுக்கு அணிவித்தனர் என்ற செய்தியை ,

**" தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டி "**

**( அகம் : 136 )**

இந்த பாடலடி மூலம் நமக்கு விற்றூற்று மூதெயினனார் விளக்கினார் .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**திருமண வீட்டை அலங்கரித்தல்**

திருமணத்திற்கு முன்பு மண மனைகள் தூய்மை செய்யப்படும் . சுண்ணாம்பு பூசுதல், காவிபட்டை தீட்டுதல் போன்ற செயல்களை முதலில் செய்வர் . பின்பு தெருவை அடைக்கும் வகையில் ஓலை கொண்டு பந்தல் அமைத்தது புது மணல் பரப்பி , வாழை மரம் , மாவிலைத் தோரணம் பூமாலைகள் கொண்டு பந்தலினை அழகுசெய்வர் . இச்செயலினை ,

**" தண் பெரும் பந்தரத் தருமணல் ஞமிரி**
**மனை விளக்குறுத்து மாலை தொடரி**
**கனை இருள் அகன்ற கவின்பெறு காலை "**

**( அகம் : 86 )**

**" மழைபட்டு அன்ன மணல்மலி பந்தர் "**

**( அகம் : 136)**

இப்பாடல்வரிகள் புதுமணல் பரப்பிய செய்திகளை எடுத்தியம்புகிறது.

**திருமணத்தில் ஆரியச் சடங்குகள்**

திருமணச் சடங்குகளை நிகழ்த்தப் புரோகிதர்கள் ஈடுபடுத்தப் பட்டதாகச் சங்க இலக்கியங்களில் குறிப்பு இல்லை . ஆனால் சங்கம் மருவிய காலத்தில் எழுந்த சிலப்பதிகாரம் , " மாமுது பார்ப்பான் மறைவழி காட்டியமை பற்றியும் , மணமக்கள் தீ வலம் வந்தமை பற்றியும் தெளிவாகக் குறிப்பிடல் காண்கிறோம் .

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

சங்க காலத்திற்குப் பின்னர் இவ்வழக்காறு கால் கொள்ளத் தொடங்கியிருக்கலாம் .

**அருந்ததி கானல்**

திருமண நாளன்று மணமக்கள் அருந்ததி பார்த்தல் சடங்கிணைப் பதிற்றுப்பத்து எனும் இலக்கியம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இதனை,

"**வதுவை மகளிர் நோக்கினர் பெயர்ந்து**
**வாழ்நாள் அறியும் வயங்குசுடர் நோக்கத்து**
**மீனொடு புரையும் கற்பின "**

**(பதி : 89)**

எனும் அடிகள் நமக்கு சுட்டுகிறது.

தமிழர்களின் திருமண சடங்குகளில் செய்யப்படும் ஒவ்வொரு காரியங்களுக்கும் வலுவான காரணங்கள் உண்டு . உதாரணமாக அம்மி மிதிப்பது நான் கற்புத் தன்மையில் அம்மியைப் போல் அதாவது கல்லைப் போல் உறுதியாக இருப்பேன் என்பதினை உணர்த்துவதாக அமைகின்றது என்று நம் முன்னோர்கள் கூறி இருப்பதனை நம்மால் அறிய முடிகின்றது.

**பரிசம் கொடுக்கும் வழக்கம்**

தலைவன் மணப்பெண்ணுக்கு பரிசம் கொடுக்கும் வழக்கம் இருந்தமையைச் சங்க பாடல்கள் நமக்கு சுட்டுகிறது.

"**முழங்கு கடல் முழவின் முசிறி அன்ன**
**நலம்சால் விழுப்பொருள்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**பணிந்துவந்து கொடுப்பினும்**
**புரையர் அல்லோர் வரையலர் இவள் "**

**(புறம் :343)**

என்ற பாடல் மூலம் இச்செய்தி விளக்க முறுகிறது.

**பரிசம் போடுதல்**

திருமணத்தின் போது மணமகன் மணமகளைப் பரிசம் போடுதல் சங்க காலத்தில் ஒரு மரபாகச் செய்து வந்தனர். இதன் அடிப்படையில் வேங்கை மரமானது திருமணத்திற்கு முக்கிய பங்காற்றி இருப்பதை,

"**மன்றல் வேங்கை கீழ் இருந்து**

**மணம்நயந் தனன் அம்மலை கிழவோற்கே"**

**(கலி : 41)**

இப்பாடலடிகள் திருமணத்தை வேங்கை மரத்தின் கீழ் அமர்ந்து முடிவு செய்து உள்ளதை எடுத்தியம்புகின்றன.

**சீர் கொடுத்தல்**

திருமணம் முடிந்தகையோடு பெண்ணுக்குத் தேவையான அனைத்துப் பொருட்களைச் சீர்வரிசையாக இன்று கொடுப்பது போல், சங்க காலத்திலும் கொடுக்கும் முறை இருந்துள்ளது என்பதை அறியும்போது வியப்பே மேலிடுகின்றது. இதனை ,

**"எக்கர் ஞாழல் மலரின் மகளிர்**

**ஒண்தழை அயருந் துறைவன்**

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**தண்தழை விலைஎன நல்கினன் நாடே "**

**( ஐங் : 147 )**

இப்பாடலடிகள் ஆண் வீட்டார் சீர் கொடுத்து பெண் கேட்கும் வழக்கத்தைக் குறிப்பிட்டுள்ளன .தமர் விரும்பும் பெரும் பொருள் வழங்கி வதுவை அயர்வானோ? என்று வருந்திய தலைவியிடம் தோழி , உன்னுடைய சுற்றம் மகிழுமாறு தன் நாட்டினை விலையாக தந்து தலைவன் மணம் பேசி முடித்துள்ளான் என்று கூறி மகிழ்வித்தான் என்பதை கூறுகின்றன .

**திருமணத்தில் விருந்தளித்தல்**

திருமணத்தில் விருந்து என்பது மிகவும் பிரபலமாகும். இவ்விருந்தானது, திருமணத்தில் ஒற்றை அடிப்படையில் சைவ அசைவ கறிகள் பரிமாறப்படும் . விருந்து பரிமாறும் பொழுது முதலில் உப்பு வைக்கப்படும் . அந்த வீட்டின் கடைசிப் பிள்ளைக்குத் திருமணம் என்றால் கடலை உருண்டை வைத்து அதை அறிவுறுத்துவர். வாழை இலை போட்டுப் பரிமாறப்படுகிற இந்த உணவு வகையில் இனிப்பு கண்டிப்பாக இடம்பெறும் . வசதி குறைவானர் என்றால் இனிப்பு பொங்கலும், வசதி மிக்கவர் என்றால் இனிப்பு வகையிலான பலகாரங்களும் பரிமாறப்படும். திருமண என்றால் விருந்தும் உண்டு , மொய்யும் உண்டு என்பதை **சரவணன்** மூலம் அறியலாம்.

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

**சாந்தி முகூர்த்தம்**

திருமணநாளின் முதல்நாள் இரவில் சாந்திமுகூர்த்தம் ஏற்பாடு செய்யப்படும். திருமணப் பந்தத்தை உறுதிப்படுத்தும் நிகழ்வினை அகநானூறு பாடல் கூறுகிறது .

**“ ஓர் இற்கூடிய உடன் புணர் கங்குல்**
**கொடும் புறம் வளைஇ கோடிக் கலிங்கத்து**
**ஒடுங்கினள் கிடந்த ஓர்புறம் தழீஇ “**

**( அகம் : 86 )**

என்னும் பாடலடிகள் , சுற்றத்தினர் கல்லென்ற ஒலியினராய் விரைந்து வந்து **‘பெருமனைக் கிழத்தி ஆவாய் ‘**எனக் கூறி ஓர் அறையில் தள்ளிக் கதவைச் சாத்தினர் என்பதை கூறுகிறது .

**முடிவுரை**

திருமணம் என்பது ஆண் பெண் இணைவு என்ற நிலையையும் மீறி , ஒரு சமூக நிகழ்வு என்ற ஏற்புப் பெறப்பட்ட காலத்தில் , மணச்சடங்குகள் தோற்றம் பெற்றன என்பதையும் அச்சடங்குகளும் கால , தேச , வர்த்தமானங்களில் விரிவுற்றும் மாறியும் வந்திருக்கின்றன என்பதையும் அறியமுடிகிறது . திருமண நிகழும் காலம் குறித்த சில வரையறைகள் பண்டைய தமிழர்களுக்கு இருந்துள்ளது. வேங்கை மலர்ந்துள்ள காலமாகவும் வளர்பிறைக்

MENMATHI KOVAI TAMIL MANDRAM INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS
மேன்மதி கோவை தமிழ் மன்றம் சர்வதேச ஆக்கப்பூர்வமான ஆய்விதழ்
Volume :6 /Issue 6 / January 2026 E-ISSN 3049-3676 (Online)

காலமாகவும் நற்கோள்கள் நிறைந்தமைந்த நாளாகவும் அமைய வேண்டும் என்பது இது குறித்துக் கிடைக்கும் குறிப்புகளாகும் . இவ்வாறாக , திருமண முறையானது ஒவ்வொரு நிலத்தின் தன்மைகளுக்கு ஏற்ப தனிச்சிறப்பு பெற்றுக் காணப்படுகின்றன . மணமுறைக்கான நன்னாள் பார்த்தல் முறைகளும் , சிலம்புகழி நோன்பு , மடலேறுதல் நிலைகளும் , குறிஞ்சி மற்றும் முல்லை நிலங்களின் சடங்குமுறைகள் போன்ற நிகழ்வினையும் பண்பாட்டு மரபுகளையும் பற்றி இக்கட்டுரையின் வாயிலாக அறிய முடிந்தது .

**துணைநூற்பாட்டியல்**

1. நற்றிணை , புலியூர்க்கேசிகன் தெளிவுரை .

2. குறுந்தொகை , புலியூர்க்கேசிகன் உரை.

3. அகநானூறு, மூலமும் உரையும் , புலியூர்க்கேசிகன் உரை .

4. ஐங்குறுநூறு , புலியூர்க்கேசிகன் உரை .

5. பதிற்றுப்பத்து , மூலமும் உரையும் , ப. ஆ ஆசிரியர் உ. வே. சா .

6. கலித்தொகை, நச்சினார்க்கினியார் உரை - கு.வெ. பாலசுப்ரமணியன் .